**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

20.01.2026

O.S. No. 342/2023

P.W. 1 **திரு.ரமேஷ்**

**சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (4 ஆம் பிரதிவாதி தரப்பில்) -**

**இந்த வழக்கில் நான் சாட்சி சொல்வதற்கு எனக்கு அதிகாரம் கொடுத்துள்ளார்களா என்றால் கொடுத்துள்ளார்கள். எந்த ஆவணத்தின் கீழ் எனக்கு அதிகாரம் கொடுத்துள்ளார்கள் என்றால் வா.சா.ஆ. 13 ஆவணத்தின் மூலம் கொடுத்துள்ளார்கள். அந்த ஆவணத்தில் இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு அதிகாரம் எதுவும் குறிப்பாக கொடுக்கப்படவில்லை என்றால் இந்த வழக்கில் வாதிக்காக எல்லா காரியங்களையும் செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அது சாட்சியம் அளிப்பதையும் சேர்த்துதான் கொடுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ. 13 கடிதம் இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு என எனக்கு கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் வாதி ஒரு பிரைவேட் லிமிடெட் கம்பெனி. அதன் இயக்குநர்கள் இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எந்த ஒரு தடையோ, இடையூறோ உள்ளதா என்றால் இல்லை. எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு அதிகாரம் இல்லாததால் என்னுடைய சாட்சியம்**

ஏற்றுகொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் ஷீலா மோசஸ் என்பவருக்கு என்ன சொத்து எழுதிகொடுக்கப்பட்டுள்ளது என ஆவணத்தை பார்த்து சொல்ல முடியுமா என்றால் புது சர்வே எண். 762, பழைய சர்வே எண். 592, ஆரல்வாய்மொழி கிராமத்தில் 6 ஏக்கர் 54 சென்டில் 5 ஏக்கர் 4 சென்டில் ரோடு போக 3 ஏக்கர் 61 சென்ட் இடம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் எந்த ஒரு வரைபடமும் சேர்க்கவில்லை என்றால் சரிதான். சிவதாணு பெயருக்கு ஷீலா மோசஸ் என்பவரால் எழுதி கொடுத்துள்ள வா.சா.ஆ. 2 ஆவணத்தில் மேற்சொன்ன வா.சா.ஆ. 1 ல் கண்டுள்ள சொத்தில் மேற்கனைய 2 ஏக்கர் எழுதி கொடுத்துள்ளார். இந்த ஆவணத்திலும் எந்த ஒரு வரைபடமும் சேர்க்கவில்லை என்றால் சரிதான். சிவதாணு வாதிக்கு எழுதி கொடுத்த வா.சா.ஆ. 3 ஆவணத்தில் புதிய சர்வே எண். 762/1 ல் 1.44.0 ெ ஹக்டேர் விஸ்தீரணம் உள்ள சொத்தில் வடமேற்கனைய 80 சென்ட் எழுதி கொடுத்துள்ளார். அந்த ஆவணத்திலும் எந்த ஒரு வரைபடமும் இணைக்கப்படவில்லை என்றால் சரியல்ல, இணைக்கப்பட்டுள்ளது. அந்த வரைபடத்தில் மேற்சொன்ன 80 சென்டிற்க்கான நீளம், அகலமோ, விஸ்தீரணமோ குறிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ. 6 ஆவணம் சாந்தா என்பவரால் வள்ளிகுமாரி என்பவருக்கு சர்வே எண். 762/1, 762/2 ஆகியவைகளில் உள்ள சொத்துக்கள் சம்பந்தமாக எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரம் என்றால் சரிதான். அந்த சாந்தாவிற்கு அந்த சொத்துக்கள் மீதான உரிமை குறித்து எந்த ஒரு ஆவணத்தையும் நீதிமன்றத்தில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ. 8 வாதி தொடர்புடைய ஆவணம் கிடையாது என்றால் சரிதான். அந்த ஆவணம் வள்ளிகுமாரி பொது அதிகார முகவராக வேறு ஒரு நிறுவனத்துக்கு எழுதி கொடுத்த ஆவணம் என்றால் சரிதான்.

வா.சா.ஆ. 9 ஆவணமும் வேறு ஒரு நிறுவனத்தால் எழுதி கொடுக்கப்பட்டது என்றாலும் அதற்கும், எங்கள் நிறுவனத்திற்கும் தொடர்பு இல்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ. 10 ஆவணம் IDBI வங்கியினால் இந்த வழக்கின் 4 ஆம் பிரதிவாதிக்கு எழுதி கொடுக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். என் வாதிக்கு சம்பந்தப்பட்ட சொத்தையும் சேர்த்து எழுதி கொடுத்துவிட்டார்கள்.

வா.சா.ஆ. 16 ஆவணம் ஒரு முழுமையான ஆவணம் இல்லை என்றாலும் அது அரைகுறையான ஆவணம் என்றால் சரியல்ல, அது முழுமையான ஆவணம். அந்த ஆவணம் யாரால் யாருக்கு அனுப்பப்பட்டது என்றோ எதற்காக கொடுக்கப்பட்டது என்ற விவரமோ இல்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணம் சொத்து அரசாங்கத்தால் எடுத்துக்கொண்டபோது NHAI யால் சார் பதிவாளர் அலுவலகத்துக்கு கொடுத்த குறிப்பாணை. அவ்வாறு அந்த ஆவணத்தில் விவரம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை.

இந்த வழக்கு சொத்து சர்வே எண். 762/1A ல் அமைந்துள்ள சொத்து என்றால் சரிதான்.

வா.சா.ஆ. 17 மற்றும் 18 ஆவணங்களான பட்டா மாறுதல் உத்தரவில் சர்வே எண். 762/1A வில் வாதி நிறுவனம் தவிர மற்றவர்கள் பெயர்கள் குறிப்பிடப்பட்டு

கூட்டு பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 17 உட்பிரிவுக்கு முன்பாகவும், வா.சா.ஆ. 18 உட்பிரிவுக்கு பிறகும் இடப்பட்ட உத்தரவுகள். அந்த இரண்டு சர்வே எண்களும் கூட்டுப்பட்டாவில் தான் உள்ளது என்றாலும் எங்கள் நிறுவனத்தின் பெயரில் தனியாக இல்லை என்றாலும்சரிதான். ஷீலா மோசசிற்கு அதிக அளவு சொத்து இருந்து அதில் ஒரு பகுதியை நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு, அவரிடமிருந்து எங்களுடைய முன் உரிமையாளர்கள் வரைபடம் எதுவும் இல்லாமல் சொத்து வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான்.

இந்த சொத்துக்கள் சம்பந்தமாக நில ஆர்ஜிதம் நடக்கும்போது நடந்த விசாரணை விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த நில ஆர்ஜிதம் குறித்து இடப்பட்ட உத்தரவு தெரியுமா என்றால் தெரியும், பார்த்துள்ளேன். 02.07.2014 ல் அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

என்னிடம் காண்பிக்கப்படும் அந்த உத்தரவில் 5 வது பக்கத்தில் அந்த விசாரணைக்கு இந்த வழக்கின் வாதி தரப்பில் யாரும் ஆஜராகவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நஷ்ட ஈடு வழங்கக்கூடிய விசாரணையில் வாதி சார்பில் நாங்கள் கலந்து கொள்ளாமல் தற்போது அந்த சொத்தில் உரிமை கொண்டாடுகிறோம் என்றால் சரியல்ல.

தேசிய நெடுஞ்சாலைக்காக சர்வே எண். 762/1 ல் கையகப்படுத்தப்பட்ட நிலம் எத்தனை சென்ட் நிலம் என காட்டும் Award நகலை தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். அந்த Award லிலும் எந்த வரைபடமும்

இணைக்கப்படவில்லை என்றால் சரிதான்.

அந்த வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்தும், கூடுதல் சொத்தும் முன் உரிமையாளருக்கு உரிமைப்பட்டிருந்தது என்றாலும் அந்த சொத்துகளின் பகுதியில் வரைபடமும் எதுவும் இணைக்காமல் விஸ்தீரணம் மட்டும் குறிப்பிட்டு விற்கப்பட்டுள்ளதால் எங்களுக்கு விற்கப்பட்ட சொத்து எந்த பகுதியில் அமைந்துள்ளது என குறிப்பாக சொல்ல முடியாது என்றால் சரியல்ல. அதேபோல அதே சர்வே எண்ணில் ஆரோ மிரோ பயோ ஸிஸ்டம் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனமும் சொத்து வாங்கியுள்ளது என்றால் சரிதான்.

ஆரோ மிரோ பயோ ஸிஸ்டம் பிரைவேட் லிமிடெட் க்கு விற்கப்பட்ட சொத்தைதான் இந்த வழக்கின் 4 ஆம் பிரதிவாதி நீதிமன்ற உத்தரவுபடி விலைக்கு வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் மொத்த சொத்தில் எங்கள் சொத்து அந்த சர்வே எண்ணில் எந்த பகுதியில் அமைந்துள்ளது என தெரிந்து கொள்வதற்காக Demarcation நிவாரணம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான்.

வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள 70 சென்ட் நிலம் அந்த சர்வே எண்ணில் எந்த பகுதியில் உள்ளது என குறிப்பிட்டு கேட்கவில்லை என்றால் சரியல்ல, நான்கு எல்கைகளும் கொடுத்துள்ளோம்.

இந்த வழக்கு பட்டிகை சொத்தும் எங்கள் கைவசம் கிடையாது என்றாலும் 4 ஆம் பிரதிவாதி கைவசம் உள்ளது என்றாலும் சரியல்ல.

4 ஆம் பிரதிவாதியை கஷ்டபடுத்த வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்து உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.